**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.184/2025**

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 01.04.2026 | | |
| பெயர்: | ரோஸ்லின் சகாயமேரி (PW–1 Chief ) | கணவர் பெயர்: | ராஜீவ்காந்தி |
| கிராமம்: | மாத்தாம்பட்டினம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வீட்டுக்குடித்தனம் | வயது : | 40/2026 |

**<u>முதல் விசாரணை : 01.04.2026</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. கடந்த 12.04.2007 தேதியிட்ட திருமண பத்திரிக்கை அசல் **வா.சா.ஆ.1** ஆகவும்,

2. எனது மகன் சாமுவேலின் பிறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.2** ஆகவும்,

3. எனது பள்ளி மாற்றுச் சான்றிதழின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) **வா.சா.ஆ.3** ஆகவும்,

4. எனது குடும்ப அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) **வா.சா.ஆ.4** ஆகவும்,

5. எனது ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது)

**வா.சா.ஆ.5** ஆகவும்,

6. எனது மகன் சாமுவேலின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) **வா.சா.ஆ.6** ஆகவும்,

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவிடும்படி வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.